**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.190/2024**
**வழக்கு சாட்சி PW.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராதா | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : நாச்சிமுத்து | கணவர் பெயர் | : காளிமுத்து |
| கிராமம் | : ஐ.வாடிப்பட்டி | வயது | : சுமார் 46 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 17.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**1–ம் பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

நான் கோயம்புத்தூரில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் ? 10 ஆண்டுகாலமாக குடியிருந்து வருகிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் ? M.B.A., M.Phil படித்துள்ளேன். எதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? எனது தகப்பனாரின் பெற்றோர்களான தாத்தா மற்றும் பாட்டி இவர்களுடைய ஆயுளுக்கு பின்னிட்டு எனது தகப்பனாருக்கு கிடைக்க வேண்டிய சொத்துக்களை பொறுத்து எனது பெரியப்பா எனது தாத்தா, பாட்டியிடம் எழுதி வாங்கிக் கொண்டார். அதனால் எனது தகப்பனாருக்கும், எனது தகப்பனார் மகளான எனக்கு கிடைக்க வேண்டிய சொத்துக்களை பொறுத்தும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனாருக்காகவும் சேர்த்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? ஆமாம். எனது தகப்பனார் பெயர் நாச்சிமுத்து ஆகும். எனது தகப்பனார் இவ்வழக்கில் தரப்பினராக உள்ளாரா என்றால் ? 2–ம் பிரதிவாதி எனது தகப்பனார் ஆகும். நான் எனது தகப்பனாருக்காகவும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்லியிருப்பது வழக்கிற்காக நான் சொல்லக்கூடியது பொய் என்றால் ? சரியல்ல. எனது தகப்பனார் நல்ல உடல் நிலையில் உள்ளாரா

என்றால் ? எனது தகப்பனாருக்கு Mind சரியில்லாத காரணத்தினால் வீட்டில் மட்டும் தான் உள்ளார். எனது தகப்பனார் எங்குள்ளார் என்றால் ? தங்கச்சியம்மாபட்டி கிராமத்தில், வயக்காட்டு தோட்டத்தில் உள்ளார். எனது தகப்பனாரை நானும், எனது தாயாரும் எப்போதும் கவனிக்கவில்லை என்றால் ? சரியல்ல. நானும், எனது தாயாரும் தான் எனது தகப்பனாரை கவனித்து கொண்டு வருகிறோம். நானும், எனது தாயாரும் எனது தகப்பனாரை எப்போதாவது மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை மேற்கொண்டோமா என்றால் ? சிகிச்சை மேற்கொண்டுள்ளோம். மனநிலை சரியில்லாததற்கு வைத்தியம் எதுவும் நாங்கள் பார்க்கவில்லை. எக்காலத்திலும், எனது தகப்பனாரை நானும், எனது தாயாரும் கவனித்தது இல்லை என்றால் ? சரியல்ல. தாவா சொத்தின் சொத்து விபரம் தெரியுமா என்றால் ? எனக்கு சர்வே எண் மறந்துவிட்டது. தாவா சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் ? தெரியும். நான் தாக்கல் செய்துள்ள தாவா 1வது இலக்க சொத்து எந்த சொத்து என்றால் ? எனக்கு சர்வே எண் தெரியவில்லை. எவ்வளவு இடம் என்றாவது தெரியுமா என்றால் ? 2 குழி. 2 குழி என்றால் ? 120 செண்ட் என்றால் ? சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், நான் சொல்லியுள்ள சொத்து தாவா 1வது அயிட்ட சொத்து அல்ல என்றாலும் ? சரியல்ல. தாவா 2வது இலக்க சொத்தில் உள்ள "அ" அட்டவணை சொத்து என்ன சொத்து என்றால் ? பூர்விக வீடு ஆகும். நான் சொல்வது தவறு என்றால் ? சரியல்ல. தாவா 2வது இலக்க "ஆ" சொத்து என்ன சொத்து என்றால் ? நிலம் ஆகும். எவ்வளவு நிலம் என்று தெரியுமா என்றால் ? 14 செண்ட் என்று நினைக்கிறேன். சரியாக எனக்கு தெரியவில்லை. எனது பெரியப்பாவிற்கு இரண்டு மகன்கள் என்றால் ? சரிதான். சுரேஷ் மற்றும் கார்த்தி ஆகியோர்கள் எனது பெரியப்பாவின் மகன்கள். அவர்கள் இருவரும் உரிய வயதை அடைந்துவிட்டார்கள் என்றால் ? சரிதான். மேஜர் என்றால் ? ஆமாம். எனது பெரியப்பா மகன்களான சுரேஷ் மற்றும் கார்த்திக் ஆகியோர்களை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ? சரிதான். தாவா சொத்துக்களை

தவிர எங்களது குடும்பத்திற்கு இன்னும் நிறைய பூர்வீக சொத்துக்கள் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? பூர்வீக சொத்துக்கள் வேறு எதுவும் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும், எங்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் இன்னும் உள்ளது என்றால் ? சரியல்ல. எனது மாமனார் பெயர் என்ன என்றால் ? கார்மேக கவுண்டர் ஆகும். அவர் வாடிப்பட்டியில் உள்ளார் என்றால் ? சரிதான். எனது மாமனார் அடிக்கடி நீதிமன்றத்திற்கு செல்லக்கூடிய பழக்கம் உள்ளவர் என்றால் ? நியாயத்திற்காக போராடுபவர். இவ்வழக்கு தாக்கல் செய்ய எனது மாமனார் தான் அனைத்து ஆவணங்களையும் பெற்று வழக்கு தாக்கல் செய்ய உதவினார் என்றால் ? இல்லை. எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றால் ? சரியல்ல. எனது மாமனாருக்கு தான் இவ்வழக்கை பற்றி அனைத்தும் தெரியும் என்றால் ? சரியல்ல.

(தொடர்ச்சியான குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.17 18:22:26 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்